மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அதுபற்றி தனியாக முயற்சியெடுக்கப்பட்டு எப்படி அவற்றின் நிதிவசதிகளைப் பெருக்க லாம் என்பதை அந்தத் துறையினர் ஆராய்ந்து கொண்டிருக்கிருர்கள். ஆனல் அதற்கென ஒரு தனிக் குழு அமைக்கப்பட்டு இருக்கிறதா என்ற விவரம் இல்லை. அதைப்பற்றிய முயற்சியை உள்ளாட்சித் துறையினர் மேற்கொண்டிருக் கிருர்கள்.

DR. H. V. HANDE : Is it not a fact that several of the amounts which have been earmarked for a particular item of work by the Corporation after getting sanction of Government that it is going to be spent for a particular item of expenditure, shifted that expenditure to another item later on without knowledge of Government. Is it not a fact that on several occasions the Corporation has shifted that amount for another item of work? If so, has it been brought to the attention of Government ? Have the Government pulled up the Corporation and taken necessary action so that such wrong thing do not take place in future in the Corporation ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, ஒரு இனத் திற்கு ஒதுக்கப்பட்ட தொகையை இன்னெரு இனத்திற்கு ஒதுக்கக் கூடாது என்று முறை இருக்கிறது. அப்படிச் செய்யப்படுமானல் அதைத் தடுத்து நிறுத்தி, அப்படிச் செலவழிக்கக் கூடாது என்றுதான் அரசாங்கம் கட்டுப் படுத்திக் கொண்டு வருகிறது. அதற்கான வகையிலேதான் அரசாங்கம் நட வடிக்கைகளை எடுத்துக் கொண்டு வருகிறது.

Taxes on vehicles in Mayuram Municipality.

* 60 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether it is a fact that the Mayuram Municipality has requested the Government to permit it to do away with the levy of cycle tax;

(*b*) if so, whether the Government have turned down the request; and

(*c*) the reasons therefor ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) ஆம்.

1972 ஆகஸ்ட் 11]

(உ) மாயூரம் நகராட்சிக்கு சைக்கிள் மற்றும் மாட்டு வண்டி, ஜட்கா வண்டிகளுக்கு வரி தள்ளுபடியின் மூலம் பெருந்தொகை இழக்க நேரிடுவதால் மாயூரம் நகராட்சியின் வேண்டுகோளை அரசு ஏற்கவில்லை.

THIRU N. DENNIS: May I know from the Hon. Minister whether such a levy has been abolished in Madras Corporation? Then why a similar thing has been disallowed to this Municipality? Would it not amount to interference in the autonomy of local bodies?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, சிலபல நகராட்சி மன்றங்களிலே சைக்கிள் வரி நீக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இப்படிப் பட்ட வரிகள் நீக்கப்படுவது அந்தந்த நகராட்சி மன்றங்களின் பொது வருமானத்தைப் பொறுத்து அது போதுமான அளவுக்கு இருந்தால் அது நீக்கப்படுகிறது. அப்படியில்லாமல் வருமானம் பற்றுக்குறையாக இருந்தால் அப்படிப் பட்ட நிலைமையில் இதையும் எடுத்துவிட்டால் மேலும் நிதிப்பற்றுக்குறை அதிகமாகத்தான் ஏற்பட்டு கஷ்டப்பட வேண்டிய நிலை இருக்கும். மாயூரம் நகராட்சியைப் பொறுத்த வரையில் சைக்கிள் வரி 6 மாதத்திற்கு 2 ரூபாய் என்று வசூலிக்கிறார்கள். இந்த வரியும், இதைப் போன்ற வண்டிகள் மூலம் வருகின்ற வரியும் சேர்த்து மொத்தம் 10 ஆயிரம் ரூபாய் வருமானம் வருகிறது. எனவே நிதிப் பற்றுக்குறை ஏற்பட்டிருக்கின்ற நகராட்சி மன்றங்களில் இப்படி பட்ட இழப்பு வேண்டாம் என்று கருதித்தான் ஏற்றுக்கொள்ளவில்லை. போதுமான நிதிவசதிகள் இருக்கின்ற நகராட்சிகளில் இது அனுமதிக்கப்படுகிறது.

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, மாயூரம் நகராட்சி பற்றுக்குறையான நகராட்சி என்று அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அங்கே ஆளுங் கட்சியாக இருக்கிற கட்சி தேர்தலுக்கு முன்பு அவர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டால் சைக்கிள் வரியை ரத்து செய்வோம் என்று சொல்லி தேர்தலில் ஈடு பட்ட காரணத்தால் அவர்கள் இப்பொழுது அப்படித் தீர்மானம் போட்டு மாட்டிக் கொண்டு விழிப்பது அரசாங்கத்துக்கு தெரியுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அந்த நகராட்சி சைக்கிள் வரியை நீக்கவேண்டுமென்று தீர்மானம் போட்டு அனுப்பியிருப்பது உண்மை தான். ஆனால் நகராட்சியின் நிதிவசதியைப் பொறுத்துத்தான் அந்தத் தீர்மானத்தை அனுமதிப்பது பற்றி அரசாங்கம் முடிவு செய்யும். நிதிப்பற்றுக் குறை இருக்கிற நிலையில் அரசாங்கம் அதை அனுமதித்தால் மேலும் நிதி இழப்புதான் ஏற்படும். எனவே அந்த வகையில் நகராட்சி தீர்மானம் போட்டு அனுப்பியிருந்தாலும் அதை அரசு ஏற்றுக்கொள்ளவில்லை என்பது தெரிவிக்கப் பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண் 67 . . . .

THIRUMATHI T. N. ANANDANAYAKI : I have been asking for a question for quite some time. I think the table light there is hiding me and as such I am not able to catch the eye of the Hon. Deputy Speaker.

MR. DEPUTY SPEAKER : The hon. Member can put her question.

திருமதி த. ந. அனந்தநாயகி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொதுவாக நகராட்சி மன்றங்களிலே கிடைக்கிற நிதிகள் ஒழுங்காக யாருக்குப் போய்ச் சேரவேண்டுமோ அவர்களுக்குப் போய்ச் சேருவதில்லை என்ற புகார்கள் மக்களிடையே நிறைய இருந்து வருகின்றன. எனவே, பொதுவாக ஒரு குழுவை அமைத்து எப்படியெல்லாம் நிதி எங்கெங்கே போய்ச் சேருகிறது, சேர வேண்டியவர்களுக்குச் சேருகிறதா என்பதையெல்லாம் ஆராய்வதற்காக ஒரு குழுவை அமைக்க அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இப்பொழுது அவையெல்லாம் கவனிக்கப்படுகிறது. ஆனால் தனிக் குழு அமைக்கப்பட்டிருக்கிறதா என்ற விவரம் இல்லை. தனிக் கேள்வி போட்டால் சொல்லலாம்.

Export of 'Illmenite'

* 67 *Q*.—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether Illmenite sand, a rare earth mineral is allowed to be exported to Japan and other Western Countries from Tuticorin ; and

(*b*) if so, the details of the same ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) தூத்துக்குடித் துறைமுகத்திலிருந்து ஐக்கிய அரசு (யூ. கே.)க்கு மட்டும் தான் 'இல்மெனைட்' ஏற்றுமதியாகியுள்ளது.

(இ) 1969-70, 1970-71 ஆகிய ஒவ்வொரு ஆண்டிலும் 10,000 கிலோ கிராம் அளவுள்ள ரூ. 1,350 மதிப்புள்ள இல்மெனைட் ஏற்றுமதியாகியுள்ளது.